இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியத்தின்

# வளரும் செடி

ஆண்டு சந்தா ரூ.25  தனிப்பிரதி ரூ.3

மலர் 17  பிப்ரவரி 2026  மணம் 11



# உங்கள் உண்மை உறங்குவதில்லை...

ஆசிரியர் : சகோ. ஜான் M. ஜெயராஜ்

# இதயந்திறந்து

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

இஸ்ரவேலே! நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். தேவன் நமக்குத் தந்திருக்கிற கிருபையின் நாட்களை நினைத்து அவரைத் துதிப்போம். நன்றியற்றவர்களும், நன்மைக்குத் தீமை செய்கிறவர்களும் பெருகிவரும் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனாலும் கர்த்தர் மாறாதவராகவும், ஒருபோதும் நம்மை மறவாதவராகவும் இருக்கிறார்.

நமது மிஷனெரிகளுக்காகவும், மிஷனரி பணித்தளங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். விசுவாசிகள் பாரம்பரிய கட்டுகளை விட்டு வெளிவரவும் சத்தியத்திற்குச் சாட்சியாக ஜீவிக்கவும் ஜெபியுங்கள். வார்த்தையினால் உண்டாகிற விடுதலையும், வளர்ச்சியும் அவர்களில் பெருகிட ஜெபிப்போம்.

தேசத்தில் நடக்கிற சம்பவங்கள் கர்த்தரின் வருகை சமீபம் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. ஆகையால் அவரைச் சந்திக்க ஆயத்தமாவோம்; ஜனங்களை ஆயத்தப்படுத்துவோம்.

எங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காகவும், குடும்பம், தொழில், ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கிறோம். ஜெபிக்க ஜெப விண்ணப்பங்களை தெரியப்படுத்துங்கள். நாம் இணைந்து ஜெபிக்கும்போது கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

'**உள்ளங்கை மேகம் எழும்புகிறது**' என்பதுதான் இந்த வருடத்தில் வாக்குத்தத்தம். அது பெருமழையின் ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இந்த வருடத்தில் நீங்கள் எதிர்பார்க்கிற காரியங்களில் வளர்ச்சியும், மேன்மையும் உண்டாகும்படியான காரியங்களைக் கர்த்தர் செய்வார். விசுவாசத்துடன் எதிர்பாருங்கள். உங்கள் நம்பிக்கை வீண்போகாது.

தேவ கிருபை நம்மில் பெருகுவதாக!

ஜெபத்துடனும் அன்புடனும்

**சகோ. ஜான் M. ஜெயராஜ்**




E-mail: yesujeevikkirar @ gmail.com, Website: www.jesuslivesministries.in

**மன்னா:**

# உங்கள் உண்மை உறங்குவதில்லை...

**உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்துவருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே...(எபி. 6:10)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

உன் கிரியைக்குப் பலன் உண்டு என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதத்திலும் அவர் தமது மன்னா வினால் நம்மைப் போஷிக்கிறார். மன்னாவை வாசிக்கிறதிலும் தியானிக்கிறதிலும் கைக்கொள்ளுகிறதிலும் கவனமாயிருந்தால் நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்...

கடந்த மாதத்தில் இந்த வருடத்திற்கான வாக்குத்தத்த வார்த்தையாகிய, **“உள்ளங்கை மேகம் எழும்புகிறது”** எனும் தலைப்பின்கீழாகக் கர்த்தருடைய வார்த்தையைக் கற்றுக் கொண்டோம். நீங்களும் அதினால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன்.

இந்த மாதத்தில், **“உங்கள் உண்மை உறங்குவதில்லை”** எனும் தலைப்பின் கீழாக, நம்முடன் பேசும்படி கர்த்தர் வந்திருக்கிறார்... காரணம் நாம் கடந்து வந்த நாட்களில் செய்ததான நற்கிரியைகளும் உதவிகளும் மறக்கப்பட்டன, ஒதுக்கப்பட்டன, ஓரங்கட்டப்பட்டன, இதினிமித்தம் இருதயமானது சோர்ந்து, தளர்ந்து, பெலனற்றுப் போனது, அதினிமித்தம் பல கேள்விகளும், மன பாரங்களும் உண்டானது. சில அனுபவங்களைக் கவனியுங்கள்.

1. ஆதி. 40:23 – **பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்து விட்டான்.**
2. யோபு 19:14 – **என் சிநேகிதர் என்னை மறந்துவிட்டார்கள்.**
3. எரே. 2:32 – **என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களை என்னை மறந்து விட்டார்கள்.**
4. ஓசி. 8:14 – **இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்.**

அன்பு நேசப்பிள்ளைகளே ! நாம் வாழ்வது மறதியின் பூமி. மனுஷன் மாறுவான், மறந்தும் போவான். ஆனால் கர்த்தரோ மாறாதவர். அவர் ஒருபோதும் நம்மை மறப்பதில்லை. நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண்போகாது. ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். (1பேது. 5:6)

சில சமயங்களில் மனதில் தோன்றுகிற நினைவுகள் சோர்வையும், கலக்கத்தையும், மனஞ்சலிப்பையும் உண்டாக்குகிறது. அதினால் புலம்புகிறவர்களும், மனம் பதறுகிறவர்களும் உண்டு. நீங்களும் கூட அப்படிப் புலம்பிக் கொண்டிருக்கிறீர்களா?

**யாக்கோபே, இஸ்ரவேலே என் வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமல் போகிறது என்றும் நீ சொல்வானேன்?...(ஏசா.40:27)**

தே. இ. பேசுவாரா!: அற்பமாய் எண்ணப்பட்டால் சந்தோஷமாயிரு(1சாமு. 17:42,43)

சொல்வானேன்? என்றால் அப்படி நீ சொல்லாதே! உள்ளங்கைகளில் வரைந்திருப்பவர் உன்னை எப்படி மறப்பார்? எப்படி கைவிடுவார்? உங்கள் உண்மை ஒருநாள் வெளிவரும் என்பதையும், அன்புள்ள பிரயாசத்திற்கு பலன் உண்டு என்பதையும் கற்றுக்கொடுக்கவே கர்த்தர் வந்திருக்கிறார். ஜெபத்துடன் தொடருங்கள். கர்த்தர் இயேசு நம்முடன் பேசுவாராக! பக்தன் பாடுகிறான்.

**கர்த்தர் மறந்திட்டார் என்று கனவிலும் நினையாதே – உன்னைக்**
**கடந்திட்ட வாழ்நாளில் கவனமாய்க் காத்தாரே**
**உள்ளங்கைகளில் வரைந்திருப்பவர் உன்னை மறப்பாரோ**
**ஒருபோதும் உன்னை அவர் மறப்பதில்லையே...**

# 1. மொர்தெகாயின் வாழ்க்கையில்!

**அந்நாட்களில் மொர்தெகாய் ராஜாவின்அரமனை வாசலில் உட்கார்ந்திருக்கிறபோது, வாசல்காக்கிற ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானும் தேரேசும் வர்மம் வைத்து, ராஜாவாகிய அகாஸ்வேருவின் மேல் கைபோடத் தேடினார்கள். இந்தக்காரியம் மொர்தெகாய்க்குத் தெரிய வந்ததினால், அவன் அதை ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான்; எஸ்தர் மொர்தெகாயின் பேரால் அதை ராஜாவுக்குச் சொன்னாள்...(எஸ்தர்.2:21,22)**

ராஜாவாகிய அகாஸ்வேரு சூசான் அரமனையிலிருக்கிற தன் ராஜ்யத்தின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான். அவன் தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந்து பண்ணினான். அப்பொழுது அதிபதிகளும் பிரபுக்களும் அவன் சமூகத்தில் வந்திருந்தார்கள்.

சூசான் அரமனையிலே பென்யமீனியனாகிய மொர்தெகாய் எனும் பேருள்ள ஒரு யூதன் இருந்தான். அவன் எருசலேமிலிருந்து பிடித்துக்கொண்டு போகப்பட்டவர்களில் ஒருவனாயிருந்தான். அவன் ராஜாவின் அரமனை வாசலிலே உட்கார்ந்திருந்தான். அந்நாட்களில் வாசற்காக்கிற ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானும் தேரேசும் வர்மம் வைத்து, ராஜாவைக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். இந்த செய்தி மொர்தெகாய்க்குத் தெரியவந்ததினால், அவன் அந்தச் செய்தியை எஸ்தர் மூலமாக ராஜாவுக்குத் தெரியப்படுத்தினான்.

அந்தக்காரியம் விசாரிக்கப்படும்போது, அது மெய்யென்று காணப்பட்டது; ஆகையால் அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கிப்போடப்பட்டார்கள். இது ராஜா சமூகத்திலே நாளாகமம் புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது. ராஜாவைக் காப்பாற்றிய மொர்தெகாய்க்கு எவ்வித சன்மானமும் வழங்கப்படவில்லை. வருடங்கள் உருண்டோடின.

ராஜாவாகிய அகாஸ்வேரு ஆமானை மேன்மைப்படுத்தி, தன்னிடத்திலிருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனுடைய ஆசனத்தை உயர்த்தி வைத்தான். ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ஊழியக்காரர் எல்லாரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள். ஆனால் மொர்தெகாய் அவனை நமஸ்கரிக்கவில்லை. அதனால் ஆமான் மொர்தெகாயின்மேல் மூர்க்கம் நிறைந்தவனானான். அவன்மேல் மட்டும் கைபோடுவது ஆமானுக்கு அற்பகாரியமாக இருந்ததினால், மொர்தெகாயின்

குலமாகிய யூத குலத்தையே அழித்துவிட திட்டமிட்டான். அதின்படி, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்ட உத்தரவையும் பெற்றுக்கொண்டான்.

எனக்கன்பானவர்களே! இந்தச் சூழ்நிலையில் ஆமான் தன் மனைவியின் தூண்டுதலின்படி, மொர்தெகாயைத் தூக்கிப்போடுவதற்காக 50 முழ உயரமான தூக்குமரத்தைச் செய்வித்தான். நாளைய தினம் ராஜாவின் உத்தரவோடு அவனைத் தூக்கிலிட வேண்டும் என்று திட்டமிட்டான்.

அந்த ராத்திரியிலே ராஜாவுக்கு நித்திரை வராதபடியினால், காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தை கொண்டுவரச் சொன்னான். அது ராஜ சமூகத்தில் வாசிக்கப்பட்டது. அப்பொழுது வாசற்காவலிகளில் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானாவும் தேரேசும், ராஜாவாகிய அகாஸ்வேறாவின்மேல் கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருக்கிறது வாசிக்கப்பட்டது.

அப்பொழுது ராஜா இதற்காக மொர்தெகாய்க்கு கனமும், மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டான். அதற்கு ராஜாவின் ஊழியக்காரர் அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். ராஜா அவனைக் கனம் பண்ணத் திட்டமிட்டான். அதன்படி மொர்தெகாய் கனம் பண்ணப்பட்டான்.

அன்பு நேசப்பிள்ளைகளே! மொர்தெகாய்க்கு ராஜாவினால் உண்டான இந்த கனம், அவன் ராஜாவை காப்பாற்றின "நான்கு ஆண்டு" – களுக்குப் பின்னர் நடக்கிறது. எல்லாரும், நன்மைப் பெற்ற ராஜாவும் மறந்து விட்டனர். ஆனால் கர்த்தர் மறக்கவில்லை. ஏற்றவேளையில் அவனைக் கனம் பண்ணி, தூக்குமர ஆபத்திலிருந்தும் காப்பாற்றினார்.

எனக்கன்பானவர்களே! நீங்கள் செய்த நன்மை, உதவி மறைக்கப்பட்டிருக்கிறதா? அதினிமித்தம் சோர்ந்து போனீர்களோ! மனம் தளர்ந்து போனீர்களோ, உங்களைத் தமது உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறவர் மறந்துபோகவில்லை. உங்கள் உண்மை உறங்குவதில்லை. உங்கள் கிரியைக்கு பலன் உண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார். அதை நிச்சயமாகவே நிறைவேற்றித் தருவார்.

## 2. சூனேமியாளின் வாழ்க்கையில்:

**பிள்ளையின் தாயோ: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றாள்...(இரா. 4:30)**

தீர்க்கதரிசியாகிய எலிசாவின் நாட்களில் சூனேம் எனும் ஊருக்குப் போகும்போது, அவ்வூரிலுள்ள ஒரு கனம் பொருந்திய ஸ்திரீ அவனைத் தன் வீட்டிற்கு அழைத்து, உபசரித்து தங்கவைப்பது, வழக்கம். இந்தச் சூழ்நிலையில் ஒருநாள் எலிசா அந்த வீட்டில் தங்கியிருக்கும்போது, தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு, இந்த சூனேமியாள், இவ்வளவு கரிசனையோடு நம்மை விசாரிக்கிறாளே! அவளுக்கு தேவை ஏதாவது உண்டா என்று கேள் என்றான். அதற்கு வேலைக்காரன்: அவளுக்குப் பிள்ளையில்லை, அவளின் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான்.

எலிசா, சூனேமியாளை அழைத்து, ஒரு பிராண உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு குமாரனைஅணைத்துக்கொண்டிருப்பாய் என்றான். அதின்படி ஒரு குமாரன்

பிறந்தான். வளர்ந்தான். ஒருநாள் தன் தாயின் மடியில் இருந்தவண்ணமாக மரித்துப்போனான். அவள் அவனைக் ஊழியரின் கட்டிலின் மேல் வைத்துவிட்டு எலிசாவினிடத்தில்போய் நடந்ததைச் சொன்னாள். அப்பொழுது எலிசா தன் வேலைக்காரன் கையிலே ஒரு தடியைக் கொடுத்து, நீ போய் அந்த தடியை பிள்ளையின்மேல் வை என்றான். அதின்படி வேலைக்காரன் தடியுடன் ஓடினான்.

அன்பு நேசப்பிள்ளைகளே! பிள்ளையின் தாயாகிய சூனேமியாளோ, வேலைக் காரன் பின்னே ஓடாமல், நான் உம்மை விடுகிறதில்லை என்று எலிசாவைப் பற்றிக் கொண்டாள். அப்பொழுது எலிசா எழுந்து அவள் பின்னே போனான். அப்பொழுது முன்னே ஓடின வேலைக்காரன் திரும்பி, எலிசாவுக்கு எதிர்கொண்டு வந்து; பிள்ளை விழிக்கவில்லை என்று சொன்னான். எலிசா வீட்டிற்கு வந்து கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான். பிள்ளையின் உடல் அனல் மூண்டது. பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான். எலிசா, சூனேமியாளை அழைதத்து: உன் பிள்ளையை எடுத்துக்கொண்டு போ என்றான். அவள் தன் குமாரனை எடுத்துக்கொண்டு போனாள்.

எனக்கன்பானவர்களே! இது எப்படி நடந்தது? அவளுடைய அன்பின் பிரயாசங்களைக் கர்த்தர் மறக்கவில்லை. அவைகளைக் கவனியுங்கள்.

1. 2இரா. 4:8 – **எலிசாவைப் போஜனம் பண்ணக் கேட்டுக் கொண்டாள்.**
2. 2இரா. 4:10 – **எலிசாவுக்காக மெத்தையின்மேல் சிறிய அறைவீட்டைக் கட்டினாள்.**
3. 2இரா. 4:21 – **மரித்த மகனை தூக்கிக் கொண்டு மெத்தைக்குப் போனாள்.**
4. 2இரா. 4:21 – **பிள்ளையை தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்தாள்.**
5. 2இரா. 4:25 – **தேவனுடைய மனுஷனிடத்துக்குப் போனாள்.**
6. 2இரா. 4:30 – **நான் உம்மை விடுகிறதில்லை.**

அன்பு நேசப்பிள்ளைகளே, சூனேமியாளின் அன்பின் பிரயாசங்களை மறவாத தேவன் உங்கள் பிரயாசங்களையும் தமது கணக்கில் வைத்திருக்கிறார். ஏற்றவேளையில் அவைகள் வெளிப்படும். உங்களின் உண்மை உறங்குவதில்லை. கர்த்தரின் வார்த்தையைக் கவனியுங்கள்.

1.எரே. 50:31 – **நான் உன்னை விசாரிக்கும் காலமாகிய உன்னுடைய நாள் வந்தது.**
2. ஆபகூக் 1:5 – **விவரிக்கப்பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன்.**

## 3. ராகாபின் வாழ்க்கையில்.

**ராகாப் அவ்விரண்டு மனுஷரையும் கொண்டுபோய் அவர்களை ஒளித்து வைத்து: மெய்தான், என்னிடத்தில் மனுஷர் வந்திருந்தார்கள்; ஆனாலும் அவர்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது...(யோசு. 2:4)**

யோசுவா வேவுக்காரராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய் வேவுபார்க்கும்படி அனுப்பி, நீங்கள்போய் தேசத்தையும், எரிகோவையும் பார்த்து வாருங்கள் என்றான். அவர்கள் போய், ராகாப் எனும் பேர்கொண்ட வேசியின் வீட்டுக்குள் பிரவேசித்து, அங்கே தங்கியிருந்தார்கள். தேசத்தை வேவு பார்க்கும்படி,

இஸ்ரவேல் புத்திரரில் சில மனுஷர் இந்த ராத்திரியிலே இங்கே வந்தார்கள் என்று இஸ்ரவேலின் ராஜாவுக்குச் சொல்லப்பட்டது.

ராஜா ராகாப்பண்டைக்கு ஆள் அனுப்பி: உன்னிடத்தில் வந்து, உன் வீட்டுக்குள் பிரவேசித்த மனுஷரை வெளியே கொண்டு வா; அவர்கள் தேசத்தையெல்லாம் வேவுபார்க்கும்படி வந்திருந்தார்கள் என்று சொல்லச் சொன்னான். அதற்கு ராகாப், அவர்கள் வந்தது மெய்தான். வாசலை அடைக்கும் நேரத்தில் போய்விட்டார்கள் என்றும் சீக்கிரமாய் போய்த் தேடுங்கள் என்று சொல்லி ராஜாவின் மனுஷரை அனுப்பி வைத்தாள். அவர்கள் புறப்பட்டவுடனே வாசல் அடைக்கப்பட்டது.

ராகாப், யோசுவா அனுப்பின வேவுக்காரர்களை வீட்டின்மேல் ஏறப்பண்ணி, அங்கு பரப்பப்பட்டிருந்த சணல் தட்டைகளுக்குள்ளே அவர்களை மறைந்து வைத்திருந்தாள். அவர்கள் படுக்கும்முன்னே, ராகாப் வீட்டின் மேல் அவர்களிடத்தில் போய் பேசினாள். கர்த்தர் உங்களுக்குத் தேசத்தை ஒப்புக்கொடுத்தார் என்றும் உங்களைப் பற்றி எங்களுக்கு திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக் குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்கள் என்றும் அறிவேன். உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்தையும், கீழே பூமியிலே தேவனானவர். இப்போதும் நான் உங்களுக்குத் தயவு செய்தபடியினால், நீங்களும் எனக்குத் தயவு செய்ய வேண்டும் என்று சொல்லி, சிவப்பு நூல் கையிற்றை அடையாளமாக வாங்கிக் கொண்டாள்.

அன்பு நேசப் பிள்ளைகளே! ராகாபின் அன்புள்ளப் பிரயாசங்களைக் கர்த்தர் மறக்கவில்லை. அவர்களைக் கவனியுங்கள்...

**1. யோசு. 2:4 – வேவுக்காரர்களை ஒளித்து வைத்தாள்.**
**2. யோசு. 2:5 – ராஜாவின் மனுஷரை சீக்கிரமாய் அனுப்பிவிட்டாள்.**
**3. யோசு. 2:8 – வேவுக்காரர் படுக்குமுன்னே அவர்களிடத்தில் போய் பேசினாள்.**
**4. யோசு. 2:16 – மூன்று நாள் மலையில் ஒளித்திருந்து பின்பு போங்கள்.**
**5. யோசு. 2:21 – ராகாப் அந்த சிவப்புக்கயிற்றை ஜன்னலிலே கட்டி வைத்தாள்.**

எனக்கன்பானவர்களே! உங்கள் உண்மை உறங்குவதில்லை. சில சமயங்களில் மறக்கப்பட்டது போல, எல்லாராலும் ஒதுக்கப்பட்டதுபோலத் தெரியலாம். உங்களைத் தமது உள்ளங்கைகளில் வரைந்து வைத்திருக்கிறவர், ஒருபோதும் உங்களை மறப்பதில்லை. உங்கள் உண்மையும், நேர்மையும் வெளிவரும் நாட்கள் நெருங்கிவிட்டது. அதற்கு அடையாளமாக "உள்ளங்கை மேகம் எழும்புகிறது" நீங்கள் விசுவாசத்தோடும், மன உறுதியோடும் அதைச் சுதந்தரிக்க உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

யோசுவா கர்த்தருடைய வார்த்தையின்படி எரிகோவை அழிக்க ஆயத்தமாகும்போது, தேசத்தை வேவு பார்த்த இருவரையும் நோக்கி: நீங்கள் ராகாபுக்கு ஆணையிட்டபடி, அவளையும் அவளுக்கு உண்டான எல்லாவற்றையும் அங்கேயிருந்து வெளியே கொண்டு வாருங்கள் என்றாள். அவர்கள் அப்படியே செய்தார்கள். ராகாப் இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலின் நடுவிலே குடியிருக்கிறாள்.

**அந்தப்படி ராகாப் எனும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள். (யாக். 2:25)**

பாவத்திற்கு தண்டனை இல்லையே ஏன்? (யாக். 2:13) ➠

அன்பு நேசப்பிள்ளைகளே! ராகாபின் அன்புள்ள பிரயாசங்களை மறவாத தேவன், உங்களை மட்டும் மறப்பாரோ? ஒருபோதும் மறக்கமாட்டார். உங்கள் கிரியைக்குப் பலனுண்டு, உங்கள் உண்மை உறங்குவதில்லை.

## 4. ரூத்தின் வாழ்க்கையில்:

**போவாஸ் புசித்துக்குடித்து, மகிழ்ச்சியிருந்து, ஒரு அம்பாரத்து அடியிலே வந்து படுத்துக்கொண்டான். அப்பொழுது ரூத்: மெல்லபோய், அவன்கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிப் படுத்துக்கொண்டாள்...(ரூத். 3:7)**

மோவாபிய ஸ்திரீயான ரூத், தன் புருஷனோடே ஏறக்குறைய பத்துவருஷம் வாழ்ந்தாள். என்றாலும் குழந்தையில்லை. புருஷன் மரித்துப்போன பின்னர், மாமியாகிய நகோமி, "நீ உன் தாய் வீட்டுக்குத் திரும்பிப் போ, என்னைப பின்பற்றி வருவதில் பிரயோஜனம் இல்லை. கர்த்தர் உனக்கு வாய்க்கச் செய்யும், புருஷனுடைய வீட்டிலே நீ சுகமாய் வாழ்ந்திருப்பாயாக" என்றாள். ஆனால் ரூத்தோ தன் மாமியை விடாமல் பற்றிக் கொண்டாள்.

வருடங்கள் கடந்தன. ஒருநாள் மாமியாகிய நகோமி தன் மருமகளைப் பார்த்து, "என் மகளே, நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்குச் சத்தியத்தைத் தேடாதிருப்பேனோ?" என்றாள். அதிபடி போவாசுக்கு மனைவியாக கொடுத்திட தீர்மானித்தாள். அதற்காக ரூத்திற்கு சில ஆலோசனைகள் சொல்லி, நீ இப்படி நடக்க வேண்டும் என்றாள். ரூத் தன் மாமி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தாள். நகோமி, ரூத்திற்குக் கற்பித்த காரியமாவது...

**நீ குளித்து எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்த களத்திற்குப்போ; அந்த மனுஷன் புசித்துக் குடித்து தீருமட்டும் அவன் கண்ணுக்கு எழுதப்படாமலிரு. அவன் படுத்துக்கொண்ட போது, அவன் படுத்திருக்கும் இடத்தை நீ பார்த்திருந்து, போய் அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி நீ படுத்துக்கொள். அப்பொழுது நீ செய்ய வேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான் என்றாள்...(ரூத். 3:3,4)**

மருமகளாகிய ரூத் மாமியார் நகோமி தனக்குச் சொன்னபடியே செய்தாள். முடிவாக ரூத் போவாசின் மனைவியானாள் என்பது உண்மை, சரித்திர சம்பவம். ரூத்தின் அன்பின் பிரயாசத்தை மறவாத தேவன், அவளை இயேசுகிறிஸ்துவின் வம்ச தண்டவனையில் கொண்டு வந்தார் என்பது எத்தனை ஆசீர்வாதமும் கனத்திற்குரிய காரியமுமாகும்.

அன்பு நேசப்பிள்ளைகளே! ரூத்தின் ஸ்தானத்தில் உங்களை நிறுத்தி, நோக்கிப்பாருங்கள். இரவு நேரத்தில் எஜமானின் படுக்கையில் அவனது காலடியில் போய் படுப்பது என்பது எளிதான காரியமல்ல. ஆனால் ரூத் தன் மாமியின் வார்த்தையைக் கனம்பண்ணி அப்படிச் செய்கிறாள். ரூத்தின் வாழ்க்கையிலுள்ள அன்பின் பிரயாசங்களையும் அறிந்து கொள்வோம்.

**1. ரூத். 1:14** – மாமியை விடாமல் பற்றிக் கொண்டாள்.

2. ரூத். 2:16 – உம்மைவிட்டுத் திரும்பி போவதைக்குறித்து என்னோடே பேச வேண்டாம் .

3. ரூத். 2:2 – நான் கதிர் பொறுக்கிக் கொண்டு வருகிறேன்.

4. ரூத். 2:11 – தன் தாய், தகப்பனை விட்டு, மாமியுடன் வந்தாள்.

5. ரூத். 3:6 – மாமி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தாள்.

ரூத்தின் அன்புள்ள பிரயாசங்களை மறவாத தேவன், உங்கள் வாழ்விலும் நீங்கள் நடந்து வந்த பாதையிலுள்ள அன்பின் பிரயாசங்களை மறப்பதில்லை. நிச்சயமாக முடிவு உண்டு. உங்கள் நம்பிக்கை வீண்போகாது.


அன்பு நேசப்பிள்ளைகளே! இந்தப்பகுதியில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான ஆவிக்குரிய அனுபவம் என்னவென்றால் போவாஸ் என்பது மணவாளனாகிய கிறிஸ்துவுக்கும், ரூத் என்பது மனவாட்டியாகிய திருச்சபைக்கும், நகோமி என்பது பரிசுத்த ஆவியானவருக்கும் அடையாளமாக இருக்கிறது. நகோமியின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்த ரூத்தைப்போல, ஆவியானவரின் நடத்துதலுக்கு கீழ்ப்படிகிற ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

சூனேமியாள், மொர்தெகாய், ராகாப், ரூத்தின் வாழ்வில் அன்புள்ள பிரயாசங்களை மறவாத தேவன், உங்களின் அன்புள்ள பிரயாசங்களையும் மறப்பதில்லை. உங்கள் உண்மை உறங்குவதில்லை. ஆமென்! அல்லேலூயா!!

## ஜெப சேனை ஜெபக் குறிப்புகள் [பிப்ரவரி 2026]



**1. மத்திய, மாநில அரசுகள் மக்கள்மேல் கவனம் செலுத்திட...**
**2. அரசு அதிகாரிகள், தலைவர்கள் உண்மையாய் செயல்பட...**
**3. மக்களின்அடிப்படை உரிமைகள், நலன்கள் பாதுகாக்கப்பட...**
**4. போதைப் பொருட்கள், சூதாட்டம், மதுக்கடைகள் அழிக்கப்பட...**
**5. மொபைல் மூலமாக ஏற்படுகின்ற பாவங்களுக்கு ஜனங்கள் விலகிட...**
**6. வாலிபர்கள், தங்கள் வாழ்வை பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ள...**
**7. தற்கொலைக்குத் தூண்டுகிற தீய கிரியைகள் அழிக்கப்பட...**
**8. முதியோர், கைவிடப்பட்டோர், ஆதரவற்றோர் பாதுகாக்கப்பட...**
**9. நமது இயேசு ஜீவிக்கிறார் ஊழியங்கள், ஊழியர்கள், விசுவாசிகளுக்காக...**
**10. நமது ஜெப சேனை, TV நிகழ்ச்சிகள், பத்திரிக்கை, புத்தக வெளியீடு, பாடல் ஊழியங்களுக்காக...**



## நடப்புச் செய்திகள்



1. நடக்கயிருக்கும் தேர்தலுக்காக கட்சிகள் தீவிரம்.
2. கூட்டணி அமைப்பதில் அரசியல் கட்சிகள் தீவிரம்.
3. கரூர் சம்பவம் விசாரனை தீவிரம் அடைகிறது.
4. ''மக்களைத் தேடி மருத்துவம்'' மக்கள் மத்தியில் வரவேற்கப்படுகிறது.
5. ஊனமுற்றோருக்கான உதவித் திட்டங்களுக்காக, மாற்றுத்திறனாளிகள் மகிழ்ச்சி.
6. செல்போன் ஆப் மூலம் புலிகள் கணக்கெடுப்பு

எறும்புக்கும் எடை உண்டு. (யோபு. 4:5)

# தேவன் இப்படியும் பேசுவாரா!

## 1. சத்தம் கேட்பவன் சித்தம் செய்வான்.

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! உம்மை அறிந்து செயல்பட எனக்கு உதவி செய்யும் என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! என் சித்தம் அறிய விரும்புகிறவன் என் சத்தம் கேட்பவனாக இருக்க வேண்டும். என் சத்தம் கேட்பவன் என் வழியில் நடக்கிறவனாக இருக்க வேண்டும். என் சத்தம் கேட்பவன் என் வழியில் நடக்கிறவனாகவும், என் விருப்பம், சித்தம் செய்பவனாக இருப்பான். தீங்கு அவனை அனுகுவதில்லை" என்றார்.

**என் ஆடுகள் என் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவைகள் எனக்கு பின் செல்லுகிறது....(யோ. 10:4**

## 2. வாழ்த்துவதை விட, வாழ்ந்து காட்டு:-!

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! வாழ்த்துவதைச் சிலர் ஏற்றுக்கொள்வது இல்லையே ஏன்? என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! நீ வாழ்த்துவது தவறல்ல, அதைவிட நீ வாழ்ந்து காட்டுவதுதான் அதிக பயனுள்ளதாக இருக்கும். வாழ்த்துவது செவியோடு நின்று விடும். ஆனால் வாழ்ந்து காட்டுவதே ஜீவனுள்ள மட்டும் நிலைத்து நிற்கும்" என்றார்.

**யோவான் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக் குறித்து சாட்சிக் கொடுக்க சாட்சியாக வந்தான்...(யோவான் 1:7)**

## 3. மற்றவருக்கு அறிவிக்குமுன் நீ அதை அனுபவி:

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! எவ்வளவாய் நிதானமாய் அறிவித்தாலும் சிலர் ஏற்றுக்கொள்வதில்லையே ஏன்? என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! எந்தக் காரியத்தை நீ மற்றவருக்கு அறிவிக்க விரும்புகிறாயோ, அதை முதலாவது உன் வாழ்க்கையில் பயிற்சி செய் (அனுபவி). அனுபவித்து அறிவிப்பதே மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்." என்றார்.

**நீ ஆயத்தப்படு... ஆயத்தப்படுத்து, காவலனாயிரு... (ஏசா.1:17)**

கிறிஸ்தவன் பலசரக்குக்கடை: (ஏசா. 1:22) ➠

# தூண்டில்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! விடைகளை வெள்ளைத் தாளில் எழுதி, வருகிற 20ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படியாக அனுப்புங்கள்.

கடைசி இரண்டு கேள்விகளும் ஆகமங்களில் உள்ளது.

**பிப்ரவரி 2026** **தூண்டில் போடுங்கள், வலை (Internet) விரிக்காதீர்கள்.**

1. எது எனக்குள் நிறைந்திருக்கிறது?
2. எதை அவர்களை விட்டுத் திருப்புவேன்?
3. நீர் கேட்டு விசாரிப்பதில்லை என்பது யார்?
4. என்னை வெறுத்து விலகிப் போகிறார்கள் – என்றது யார்?
5. என்னைக் கொன்றுபோடுவானே – என்றது யார்?
6. அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை – யார் அவன்?
7. இனி அவர்களுக்கு மறைக்க மாட்டேன் – என்றது யார்?
8. அவர்கள் உங்களுக்குப் பயப்படுவார்கள் – என்றது யார்?
9. எது உன்னிடத்தில் வரும்?
10. உங்களுக்குப் பிரத்தியட்சமாய் விளங்கும் – என்றது யார்?
11. அவன் தோத்தானில் இருக்கிறான் – யார் அவன்?
12. நீரும் எனக்கு விரோதியாயிருப்பீர் – என்றது யார்?

## 2025 ஜனவரி மாத மீன்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. 1நாளா. 12:17 | – தாவீது | 7. எசே. 26:21 | – கர்த்தர் |
| 2. எசே. 7:21 | – துஷ்டர்கள் | 8. சக. 5:6 | – தூதன் |
| 3. யோபு 29:8 | – வாலிபர் | 9. சங். 77:11 | – கர்த்தருடைய |
| 4. எரே. 18:6 | – கர்த்தர் | 10. மீகா. 7:7 | – என் தேவன் |
| 5. 2இரா. 9:18 | – யெகூ | 11. உபா. 2:7 | – கர்த்தர் |
| 6. ஏசா. 5:30 | – மேகங்களினால் | 12. ஆதி. 27:19 | – யாக்கோபு |

## 2025 டிசம்பர் மாதம் மீன் பிடித்தவர்கள்

01. Mrs. ஜேன் தர்மராஜ் – பாக்கியநாதபுரம்.
02. Mrs.D. ஜெபக்குட்டி மோசஸ் – மருதகுளம்.
03. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி.
04. Mrs. செல்வி ஜேக்கப் – தென்காசி.
05. Mrs. ஹெலன் சுவிட் – டோனாவூர்.
06. Sist. லாய்ஸ் ஜான் – பணகுடி
07. Mrs. அன்னத்தாய் ஆல்பட் – மெஞ்ஞானபுரம்.
08. Mrs. அன்னபாக்கியம் தினகரன் – மதுரை.
09. Mrs. J. ஜான்சி – ஆனைமலை
10. Mrs. சுசிலா ஜெயக்குமார் – அரக்கோணம்.
11. Mrs. ஷெர்லி சாம் – அரக்கோணம்.
12. Sist. அலீஸ் குணசீலி – சாயர்புரம்.

Registered News Paper
R.n.i. No : Tntam / 2004 / 12805. Postal Regn. No : Tvl / 005 / 2021 - 2023
Date of Publication : 01.02.2026



# இயேசு ஜீவிக்கிறார் வெளியீடுகள்

தேவ கிருபையினால் பாடல் CD–க்களும், புத்தகமும் வெளியிடக் கர்த்தர் உதவி செய்தார். ஜீவ கீதங்கள் பாடல்களும் மற்றும் புதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஜெபத்துடன் பெற்று பயனடையுங்கள்.

## பதிவுத் தபாலில் அனுப்பிட செலவு தனி

1. ஜீவ கீதங்கள் (ACD) (Vol : 1 to 24)
2. ஜீவ கீதங்கள் (VCD), MP3
3. கேட்கும் கிருபை
4. ஜீவ கீதங்கள் (220 + 35 பாடல்கள்)
5. தேவன் இப்படியும் பேசுவாரா! (Part 1-8)
6. நோவாவின் பேழை
7. வளரும் செடி
8. மனிதன்
9. வெற்றியுள்ளவன்
10. முதலாம் அற்புதம்
11. வாலிபனே நீ யார்?
12. என் இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது
13. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன்
14. தேவன் தெரிந்த நாகமான்
15. ஊழியரே இது உங்களுக்காக (50 செய்திகள்)
16. டோனாவூரம்மா
17. நான் கண்ட சபேயு
18. ஜீவ விதைகள் (150 பிரசங்க குறிப்புகள்)
19. நகோமி
20. அந்த ராத்திரியிலே...

**JOHN M. JEYARAJ,**
178, Dohnavur Road, Mavadi - 627 107
Tirunelveli Dist., S. India
Phone : (04635) 210 691, Cell : 94431 13292
E-mail : yesujeevikkirar@gmail.com, Website : www.jesuslivesministries.in

Book Post

To

Owned & Published by : John M. Jeyaraj From 123-A, Dohnavur Road, Mavadi - 627107 - Tirunelveli District. Printed by Mr. S. Jairus Ponniah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai. Tirunelveli Dt. - 627 002. Editor : John M. Jeyaraj